**சுருக்கம்**

தொழில் துறை – 2015–2016ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் – ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் இரண்டு தாங்கு உருளைகள்(Support Roller) மற்றும் 1,200 சங்கிலிகள்(Kiln Chain) ஆகியவை புதுப்பித்தல் – அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஐ.டி.2) துறை**

**அரசாணை (டி) எண். 163** **நாள் : 08.09.2015**

மன்மத, ஆவணி 22,
திருவள்ளுவர் ஆண்டு –2046

**ஆணை :**

2015–2016ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> "தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் உள்ள சூளையின் உற்பத்தித் திறனை மேம்படுத்த இரண்டு தாங்கு உருளைகள் (Support Roller) மற்றும் 1,200 சங்கிலிகள்(Kiln Chain) ஆகியவை ரூ.80 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்".

2. மேற்காணும் திட்டத்தினை தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு நடைமுறைகளில் உள்ள விதிகளைப் பின்பற்றி குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைபடுத்த அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்தின் வளர்ச்சி குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் பணிக்கப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. வி. சங்கர்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்:
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்,
735, எல்எல்ஏ கட்டிடம், அண்ணா சாலை,
சென்னை – 2.
நகல்:
மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள்,
சென்னை–600 009.
தொழில் (அ.ந.மு.2/வ.செ.தி.1) துறை, சென்னை–600 009.
இ.கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

**பிரிவு அலுவலர்**